செய்தி மக்கள் தொடர்பு துறை
செய்தி வெளியீடு எண்: 210 நாள்: 10/4/17

## வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செய்திக் குறிப்பு

வேலைவாய்ப்பற்ற அனைத்து வகை மாற்றுத்திறனாளி இளைஞர்களுக்கான உதவித்தொகை வழங்கும் திட்டம் தமிழ்நாடு அரசினால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 01.01.2016 முதல் 31.03.2016 வரையான காலாண்டில் பதிவு செய்து தற்போது ஓராண்டு முடிவு பெற்றுள்ள பட்டப்படிப்பு, மேல்நிலைக் கல்வி, பட்டயப்படிப்பு, எஸ்.எஸ்.எல்.சி, மற்றும் பள்ளி இறுதித் தேர்வு தேர்ச்சி பெறாதவர்கள் ஆகிய தகுதிகளை பதிவு செய்துள்ள, அனைத்து இனத்தவருக்கும்(OC, BC, BCM, MBC, SC, SCA & ST) வயது வரம்பு 45-க்குள் உள்ள அனைத்து வகை மாற்றுத் திறனாளி இளைஞர்கள் நடப்புக் காலாண்டிற்கு உதவித்தொகை கோரி விண்ணப்பிக்க ஏதுவாக அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களை வேலூர், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பம் அளித்து, தொகை ஒப்பளிக்கப்படும் தேதியிலிருந்து உச்ச வயது வரம்பு ஏதுமின்றி 10 ஆண்டுகள் தொடர்ந்து உதவித் தொகை வழங்கப்படும். வேலைவாய்ப்பு அலுவலக பதிவு அடையாள அட்டையுடன் வேலை நாட்களில் நேரில் சென்று விண்ணப்பத்தினை பெற்றுக் கொள்ளலாம்.

### ஏற்கனவே வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகை பெற்று வருவோர் கவனத்திற்கு

வேலைவாய்ப்பற்ற அனைத்து வகை மாற்றுத்திறனாளி இளைஞர்களுக்கான உதவித் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் உதவித் தொகைக்கான விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து ஓராண்டு கழித்து, ஒவ்வொரு ஆண்டும் தொடக்கத்தில் 'பணியில் இல்லை' என்ற சுய உறுதி மொழி படிவத்தை அளிக்க வேண்டும்.

### நிர்ணயிக்கப்பட்ட சுய உறுதி மொழி படிவத்துடன்

வேலைவாய்ப்பு அலுவலகப் பதிவு அடையாள அட்டை மற்றும் நாளது தேதி வரை பதிவுகள் இடப்பட்ட வங்கி சேமிப்புக் கணக்குப் புத்தகம் ஆகியவற்றின் போட்டோ நகல்கள் இணைக்கப்பட்டு நேரில் அல்லது அஞ்சல் மூலம் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு சமர்ப்பிக்க தவறினால் வேலைவாய்ப்பற்றோர் உதவித் தொகை உடனடியாக நிறுத்தப்படும். மேலும் வேலைவாய்ப்பற்றோர் உதவித் தொகை பெறுவதால் பதிவு ஏதும் ரத்தாகாது.

இவ்வாறு மாவட்ட ஆட்சித் தலைவர் சி.அ.ராமன்., இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்துள்ளார்.

ஒம்/...................
மாவட்ட ஆட்சித் தலைவர்,
வேலூர்-9.

/உண்மை நகல்/

உதவி இயக்குநர்,
மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம்,
வேலூர்-632 010.

செ.ம.தொ.அ.
வேலூர்- 9.